முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.08.2023) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னை, போரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட சரக்கு போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மையில் உலகளவில் முன்னணியில் உள்ள UPS (United Parcel Service) நிறுவனம், இந்தியாவில் முதலாவதாக, சென்னை போரூரில் அமைத்துள்ள தொழில்நுட்ப மையத்தை (Technology Centre) திறந்து வைத்து, 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அம்மையத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கான பயிற்சி (Internship) பெறுவதற்கு அனுமதி கடிதங்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, UPS நிறுவனத்தின் உலகளாவிய தலைமை டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பாலசுப்ரமணியன், தலைமை மனித வள அலுவலர் டேரல் ஃபோர்டு, இந்தியாவிற்கான துணைத் தலைவர் சுப்ரமணி ராமகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சமத்துவம் - வளர்ச்சி - ஒற்றுமை நிறைந்த

இந்தியாவை மீட்டெடுக்க உறுதியேற்போம்!

மலையாளச் சொந்தங்களுக்கு முதல்வர் ஓணம் திருநாள் வாழ்த்து!

சென்னை,ஆக. 29- ஓணம் திருநாளை யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், "சமத்துவமும் வளர்ச்சியும் ஒற்றுமையும் நிறைந்த இந்தியாவை மீட்டெடுக்க நாம் அனைவரும் உறுதியேற்போம்" என குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஓணம் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

கேரள மக்கள் அனைவராலும் எழுச்சியோடும் ஒற்றுமையோடும் கொண்டாடப்படும் அறுவடைப் பெருவிழாவாம் ஓணம் திருநாளை முன்னிட்டு மலையாள சொந்தங்கள் அனைவருக்கும் எனது ஓணம் வாழ்த்துகள்!

ஓணத்திருநாள் அன்று, தமிழ்நாட்டில் மலையாள மொழி பேசும் மக்கள் நிறைந்து வாழும் மாவட்டங்களான கன்னியாகுமரி, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களுக்கு 2006ஆம் ஆண்டும், தலைநகர் சென்னைக்கு

2007ஆம் ஆண்டும் கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் முதல மைச்சராக இருந்தபோதுதான் விடுமுறை அறிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அறுவடைத் திருநாளாக மட்டுமல்லாமல், வஞ்சகத்தால் வீழ்த்தப்பட்ட திராவிட மன்னனான மாவேலியைக் கேரள மக்கள் அன்போடு வரவேற்கும் விழாவாகவும் குறியீட்டளவில் ஓணம் கொண்டாடப்படுகிறது. இத்தகைய ஓணம் திருநாள் சங்க இலக்கியமான மதுரைக்காஞ்சியிலும் "மாயோன் மேய ஓண நன்னாள்" எனச் சிறப்புடன் பாடப்பட்டிருக்கிறது. இவ்வாறு திராவிடப் பண்பாட்டுடன் பிரிக்க முடியாது, இரண்டறக் கலந்துள்ள ஓணத்தையும் விட்டுவைக்காமல், ஒரு தரப்பினர் 'வாமன ஜெயந்தி' என அதன் அடையாளத்தைப் பறிக்க முயல்கிறார்கள். கேரள மக்களே இத்தகைய குயுக்தி முயற்சிகளைப் புறக்கணிப்பார்கள்.

மக்களைப் பிளவுபடுத்தி, அதில் குளிர்காய நினைக்கும் சுயநல வஞ்சகர்கள் வீழ்ந்துபடும் ஓணமாக வரும் ஓணம் அமையும் வகையில் நாட்டு மக்கள் விழிப்புணர்வு அடைந்து வருகிறார்கள்.

சமத்துவமும், வளர்ச்சியும், ஒற்றுமையும் நிறைந்த இந்தியாவை மீட்டெடுக்க நாம் அனைவரும் உறுதியேற்கிற நாளாக இந்த ஓணத் திருநாள் அமையட்டும்! நம் தென்னாட்டு மக்கள் காட்டிய முற்போக்கு அரசியல் பாதையில் ஒட்டுமொத்த இந்தியாவும் பயணிக்கும் ஆண்டாக வருகிற ஆண்டு திகழட்டும்!

திராவிட மொழிக் குடும்பத்தின் உடன்பிறப்புகளான கேரள மக்கள் அனைவருக்கும் மீண்டுமொருமுறை எனது ஓணம் நல்வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

ஊழலும் பொய்யும் கலந்துள்ள

ஒன்றிய அரசை வீட்டுக்கு அனுப்பி விடியலைக் காண்போம்!

'தினகரன்' நாளேடு தலையங்கம்!

தினகரன்

ஆகஸ்ட் 28, 2023 திங்கட்கிழமை

பொய்யும்... ஊழலும்...

பிரதமர் மோடி தலைமையிலான கடந்த 9 ஆண்டுகால பா.ஜ. ஆட்சி பொதுமக்களை பெரிதும் துன்புறுத்துவதாக உள்ளது. பரபரப்பை உருவாக்குவதற்காக மோடி தொடங்கிய பண மதிப்பிழப்பு நடவடிக்கை, கடைசியில் பொதுமக்களை வங்கிகளின் வாசலில் பிச்சைக்காரர்களாக நிறுத்தியது. ஜி.எஸ்.டி. அறிமுகம், குடியுரிமை திருத்த சட்டம், விவசாய, மின்சார புதிய திருத்த சட்டங்கள் அனைத்தும் சாமானிய மக்களை வாட்டி வதைத்தன. ஆட்சிக்கு வரும்முன்பு கருப்பு பணத்தை கைப்பற்றி இந்தியாவுக்கு கொண்டு வருவோம் என மோடி தேர்தல் பரப்புரையில் தெரிவித்திருந்தார். ஒவ்வொருவரது வங்கி கணக்கிலும் ரூ.15 லட்சம் போடுவோம் என்றார்... ஆனால் இதுநாள் வரை அது நடக்கவில்லை.

பா.ஜ. ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்றார். ஆனால் கடந்த 9 ஆண்டுகளில் 2 கோடி பேருக்கு வேலை கிடைத்ததா என்றால், அதுவும் இல்லை. வாயால் வடை சுடும் மோடியின் ஒன்றிய ஆட்சியில் ஊழல்களுக்கும் பஞ்சமில்லை. அரசின் செலவுகள் குறித்து ஆய்வு செய்து ஒப்புதல் அளிக்கும் சி.ஏ.ஜி.யின் அறிக்கைகளில், இப்போது ஒன்றிய அரசின் ஊழல்கள் நாறுகின்றன. பாரத் மாலா திட்டம், துவாரகா விரைவுப்பாதை கட்டுமான திட்டம், சுங்கச்சாவடி கட்டணங்கள், ஆயுஷ்மான் பாரத் திட்டம், அயோத்தியா மேம்பாட்டு திட்டம், கிராமப்புற அமைச்சகத்தின் ஓய்வூதிய திட்டம், எச்.ஏ.எல். விமான வடிவமைப்பு திட்டம் ஆகிய 7 திட்டங்களிலும் பல கோடி ஊழல் நடந்துள்ளதை சி.ஏ.ஜி. அறிக்கை எடுத்து சொல்கிறது.

அதிலும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் 9999999999 என்ற போலி செல் எண் மூலம் 7.5 லட்சம் பயனாளிகள் இணைக்கப்பட்டு ஊழல் அரங்கேறியிருக்கிறது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் சிகிச்சை பெற்ற 88 ஆயிரத்து 769 பேர் இறந்துவிட்டனர். இருப்பினும் அவர்கள் தொடர்ந்து சிகிச்சை பெறுவதாக கூறி ரூ.2 லட்சத்து 14 ஆயிரம் காப்பீடு தொகை வழங்கப்பட்டுள்ளது. செத்து போனவர்களுக்கு காப்பீட்டு தொகையை வழங்கி இத்திட்டத்தில் ஒன்றிய அரசு ஊழலை அரங்கேற்றியது. துவாரகா விரைவு நெடுஞ்சாலை திட்டத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.18 கோடி என இருந்த செலவு, தற்போது ரூ.250 கோடி என அதிகரித்துள்ளது. திட்ட மதிப்பை விட 278 மடங்கு கூடுதல் செலவு செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சுங்க சாவடிகளில் ஒன்றிய அரசு அடித்து வரும் கொள்ளை கணக்கில்லாதது. பல்வேறு மாநிலங்களில் நான்கு வழிச்சாலையில் பயணிப்போர் சுங்கச்சாவடிகளுக்கு பயந்தே சொந்த வாகனங்களில் தொலைதூர பயணங்களை தவிர்க்கின்றனர். அந்தளவுக்கு சுங்கச்சாவடிகளில் கட்டண வசூல் களை கட்டுகிறது. நாடு முழுவதும் உள்ள சுங்கச்சாவடிகளில் 5 சுங்கச்சாவடிகளை மட்டும் சி.ஏ.ஜி. தேர்வு செய்து, ஆய்வு நடத்தியதில், தேசிய நெடுஞ்சாலை ஆணைய விதிகளுக்கு புறம்பாக ரூ.132 கோடியை வாகன ஓட்டிகளிடம் வசூல் செய்திருப்பது தெரிய வந்துள்ளது.

தமிழ்நாட்டில் பரனூர் சுங்கச்சாவடியில் மட்டுமே ரூ.6.50 கோடி முறைகேடாக வசூலிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள சுங்கச்சாவடிகளை ஆய்வு செய்தால், பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு முறைகேடுகள் நடந்திருக்கக் கூடும். மேலும் ஒன்றிய அமைச்சகங்கள், உள்துறை அமைச்சக அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் மீது கடந்தாண்டு மட்டுமே அதிக புகார்கள் பதிவாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஊழலும், பொய்யும் கலந்த இந்த ஒன்றிய அரசை விரைவில் வீட்டுக்கு அனுப்புவதே இந்தியாவின் விடியலுக்கான வழியாகும்.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

கழகத் தலைவராக 5 ஆண்டுகள் நிறைவு!

இந்தியாவை மீட்டெடுக்கும் முதல்வரின் பணிகள் நமக்கு எழுச்சியூட்டும்!

கழகத் தலைவருக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்து!

சென்னை, ஆக. 29 - கழகத் தலைவராக 5 ஆண்டுகள் நிறைவு செய்துள்ள கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமது ட்விட்டரில் வாழ்த்துத் தெரிவித்துள்ள கனிமொழி கருணாநிதி எம்.பி.,"ஒன்றுபட்ட இந்தியாவை மீட்டெடுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசியல் பணிகள் நமக்கு எழுச்சியூட்டுகின்றன" என குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:-

பேரறிஞர் அண்ணாவும் தலைவர் கலைஞரும் கட்டிக்காத்த நம் தி.மு.கழகத்தின் தலைவராக ஐந்தாண்டுகள் சிறப்புற பணியாற்றி, ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு என் வாழ்த்துகள்.

இந்திய ஜனநாயகம் கடும் நெருக்கடியைச் சந்தித்து வரும் வேளையில், ஒன்றுபட்ட இந்தியாவை மீட்டெடுக்கும் அவரது அரசியல் பணிகள் நமக்கு எழுச்சியூட்டுகின்றன.

இவ்வாறு அவர், தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

உலகத் தடகள சாம்பியன் ஷிப்பில் - ஈட்டி எறிதலில்

தங்கம் வென்ற நீரஜ் சோப்ராவுக்கு பாராட்டு!

முதல்வர் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 29- உலகத் தடகள சாம்பியன் ஷிப்பில் தங்கம் வென்ற ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ராவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

உலகத் தடகள சாம்பியன் ஷிப்பில் தங்கம்வென்றமுதல் இந்தியராக வரலாறு படைத்து, இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்துள்ள ஈட்டி எறிதல் வீரர் நீரஜ்சோப்ரா அவர்களுக்கு நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

உங்களது அர்ப்பணிப்புணர்வும் இமாலய சாதனைகளும் உலக விளையாட்டு அரங்கில் இந்தியாவின் நிலையைத் தொடர்ந்து உயர்த்தி வருகின்றன.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு வருகை தரும்

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பிரம்மாண்ட வரவேற்பு!

மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ வேண்டுகோள்

திருவள்ளூர் ஆகஸ்ட் 29; திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று ஆவடி அடுத்த பட்டாபிராம் ஜெய் கிரீஸ் மண்டபத்தில் நடைபெற்றது இக் கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.இராஜி தலைமை தங்கினார் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபால், காயத்ரி ஸ்ரீதரன், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், எம்.முத்த மிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனாசுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கித்தார்கள் இக் கூட்டம் முன்னதாக ஜி.நாராயணபிரசாத் வரவேற்புரையாற்றினார் இந் நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் பல்வேறு ஆலோசனை வழங்கினார் அப்போது பேசியதாவது

வருகின்ற 31ஆம் தேதி அன்று தமிழ்நாடு அரசின் முதலமைச்சர், திராவிட நாயகர், கழகத்தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, திருவள்ளூர் மாவட்ட இளைஞர் அணியின் செயல் வீரர்கள் கூட்டம், கழகத்தின் முதன்மை அணியாம் இளைஞர் அணியினை எழுச்சியோடு வழிநடத்தி, கோடானு கோடி இளைஞர்களின் நெஞ்சங்களில் இடம்பெற்று, தமிழ் நாட்டு இளைஞர்களின் விளையாட்டு மேம்பாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து, உலக அளவில் அவர்களை விளையாட்டுத்துறையில் மிளிர செய்துவரும்,

தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள ஆவடியில் நடைபெற இருக்கிறது. இந்த கூட்டத்தில் மாநில மாவட்ட, நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி செயலாளர்கள் கழகநிர்வாகிகள் அந்தந்த பகுதிகளில் உள்ள இளைஞர் அணி தம்பிமார்களை வெண்ணிற சீருடையுடன் தவறாமல் பங்கேற்கதங்களது முழு ஒத்துழைப்பை வழங்கிடவும், கழகத்தின் அடலேறுகளாம் இளைஞர்அணியின் எழுச்சி மிக்க உடன்பிறப்புகள் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்கவும் கேட்டு கொண்டார்

மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் வரவேற்பு வழங்கப்பட உள்ளது.

வரவேற்பு நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத்தைச் சேர்ந்த உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், இளைஞர் அணியினர், கழகமூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

கழக இளைஞரணி செயலாளர் வருகை தரும்போது சிறப்பான முறையில் போக்குவரத்துக்கு இடையூறும் இல்லாமல் சாலைகளில் கழக இரு வண்ணம் கொடியை அமைத்து தோரணைகளை கட்டி வரவேற்பு அளிக்க வேண்டும்

நடைபெற உள்ள இரண்டாவது இளைஞர் அணி மாநாட்டில் நமது திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் இளைஞர் அணி உள்பட பல் வேறு அணி நிர்வாகிகள் தாங்கள் பகுதியில் உள்ள இளைஞர் நிர்வாகிகளைஅழைத்து மாநாட்டிற்கு பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் அதனை தொடந்து பேசியா அவர்

கடின உழைப்பின் காரணமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமரை தேர்தெடுக்க கூடிய நிலையில் உயர்ந்துள்ளதாகவும் , திமுகவில் உள்ள அனைவரும் தொடர்ந்து கடினமாக உழைத்தால் மட்டுமே உயர முடியும் என தெரிவித்தார்

இதில் அப்துல் மாலிக், சன் பிரகாஷ், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், பேபி சேகர், டி.தேசிங்கு, என்.இ.கே.மூர்த்தி, ஆர்.ஜெயசீலன், புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம் ஆனந்த், தங்கம் முரளி, ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஸ்வரன், மாசெ.ராஜேஷ், பிரியாகுமார், துர்கா பிரசாத், வி.தியாகராஜன், ஏ.ஜெ.பவுல், பிரவீன் குமார், நடுக்குத்தகை எம்.மோகன், ஏ.ஜி.ரவி, வினோத், த.குமரேசன், எம்.இளையான் , சௌந்தர்ராஜன், கு.தமிழ்ச்செல்வி , விமல் ஆனந்த் , என்.பி.மாரிமுத்து, குமரேசன் , நிஜலிங்கம் , ஷாஜகான் , இ.ஜக்கப், பார்த்திபன், பஷீர், உள்பட அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கே.சுரேஷ் குமார் நன்றி கூறினார்.

திருவள்ளூர் ஆய்வுக் கூட்டத்திற்கு வருகை தரும்

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாபெரும் வரவேற்பு!

மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர் ஆகஸ்ட் 29- திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூரில் உள்ள டி.கே.எம். மஹாலில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் நடைபெற்றது தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், மாநில தொழிலாளர் அணி பயிற்சியாளர் மாஸ்டர். இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதம், வி.கிஷோர், மு.சுப்பிரமணி யம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இக் கூட்டத்தில் முன்னதாக திருவள்ளூர் நகர கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் ஆகியோர் வரவேற்புரையாற்றினார். இதில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சிறப்புரை யற்றினார் அப்போது பேசியதாவது:-

ஒற்றைச் செங்கல்லை வைத்து தமிழ்நாடு முழுவதும் தேர்தல் சுற்றுப் பயணம் செய்து மோடியின் முகத்திரையைக் கிழித்த, நாடாளுமன்ற தேர்தல், சட்ட மன்றத் தேர்தல், உள்ளாட்சி தேர்தல், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து கழக வெற்றிக்கு உழைத்திட்ட உழைப்பால் உயர்ந்திட்ட இளைஞர் அணி செயலாளர், இளைஞர் மற்றும் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (31ஆம் தேதி) திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்.

மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் வரவேற்பு திருவள்ளூரில் வழங்கப்பட உள்ளது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள்,

கழகத்தைச் சேர்ந்த உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், இளைஞர் அணியினர், கழகமூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

மேலும் திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் 31 தேதி மாலை நடைபெற உள்ள மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் அணியின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வழிகாட்டுதலின் படி அதிக அளவில் இளைஞர் அணியினரை வெள்ளை நற சீருடை அணிவித்து இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்க செய்திட வேண்டும்.

நடைபெற உள்ள தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூளூர்.ரா ஜேந்திரன் க.அரிகிருஷ்ணன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், ஆர்த்திரவி , பிடி.சந்திரன் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமார், டி.கே. பாபு, ம.புவனேஷ், டி.ஆர். திலீபன், ஏ.முரளி சேனா, களம்பாக்கம் எம்.பன்னீர்செல்வம், சரஸ்வதிசந்திர சேகர் பி.கே.நாகராஜ், சித்திக் அலி, சி.சு.விஜயகுமார், எம்.எஸ்.அருண்குமார், பி.எல்.ஆனந்தன், ஜி.எம்.கிஷோர், எஸ்.பன்னீர்செல்வம், ஜெகஜீவன்ராம், மதுசூதனன், ப.கோபால், என்.நந்தகோபால், எம்.சீனிவாசன், ஆர்.ரவி, வி.எஸ்.சதீஷ் குமார், கு.பிரபாகரன், ஆ.பவளவண்ணன், உள்பட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

திருச்சி வடக்கு, தெற்கு மற்றும் மத்திய மாவட்ட இளைஞர் அணிச் செயல்வீரர்கள் கூட்டம் நேற்று திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., வைரமணி, இளைஞர் அணி துணைச் செயலாளர் ஆனந்தகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஸ்டாலின்குமார், பழனியாண்டி, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் ஆனந்த், கார்த்தி மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.